# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS. 1/2014. நாள்.21.02.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மூர்த்தி | வயது | 47 |
| த/பெ. க/பெ. | பக்தவாச்சலம் | மதம் | |
| முகவரி | கண்ணுகானூர் | தொழில் | விவசாயம் |

**<u>பி.சா.1 ஆஜர். முதல் விசாரணை :</u>**

நான் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பில் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டது ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 13.02.2013 தேதியிட்ட ஆவண எண்.587/2013 தான செட்டில்மண்ட் பத்திரத்தின் அசல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. தாவா சொத்தில் நான் கட்டிய வீட்டிற்காக வீடியோவின் குறுந்தகடு அசல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 07.02.2024 தேதியிட்ட பட்டா எண்.1258 க்கான இணையதள நகல் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 07.02.2024 தேதிய பட்டா எண்.1263 க்கான இணையதள நகல் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 29.01.2024 தேதிய பசலி எண்.1433 க்கான கந்தாய ரசீது அசல் பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பில் பி.சா.ஆ.1 ஆவணத்தில் வாதியின் கையெழுத்து ஆனது சாட்சிகள் என்ற இடத்தில் மோசடியாக போடப்பட்டுள்ளது என்று ஆட்சேபனை செய்யப்பட்டது.

ஆட்சேபனையின் பேரில் பி.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டது.

தாவாவை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.